# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ● ஜனவரி 8, 2022

Weekly E-paper ● January 8, 2022





# பஞ்சாயப் பறந்த பஞ்சாப் பயணம்!

சுப.வீரபாண்டியன்

## கனியிருக்கக் காய் வேண்டாம்

தலையங்கம்

## தமிழர் திருநாள் வாழ்த்துகள்

ஜனனி

## நீட் சட்ட முன்வடிவு: ஆளுநரும் அமித்ஷாவும்

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ● ஜனவரி 8, 2022 Weekly E-paper ● January 8, 2022


## பஞ்சாய்ப் பறந்த பஞ்சாப் பயணம்!

## மானுடத்திற்கு எதிரான மதவாதிகள்!

சுப.வீரபாண்டியன்

*கடந்த 5 ஆம் தேதி தன் பஞ்சாப் பயணத்தைப் பாதியிலேயே முடித்துக் கொண்டு தில்லி திரும்பிய பிரதமர் மோடி, “தான் உயிர் பிழைத்து வந்ததே பெரிய காரியம்” என்பதுபோல் சொல்லியதைக் கேட்டு நாடே அதிர்ந்து போய்விட்டது! பாஜக ஆட்சியில் பிரதமருக்கே உயிருக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டதோ என்ற எண்ணம் நாடெங்கும் எழுந்தது!*

*இந்திய உள்துறை, உளவுத்துறை, சிறப்புப் பாதுகாப்புப் படை (SPG) எல்லாம் என்ன செய்கின்றன என்று மக்கள் கேட்கத் தொடங்கிவிட்டனர்.*

*மோசமான வானிலை காரணமாக ஹெலிகாப்டர் பயணத்தைத் தவிர்த்த பிரதமர், பதிண்டாவிலிருந்து பெராஸ்பூர் வரையில் சாலை வழியாகவே 110 கி.மீ. தூரத்தையும் கடக்க முயன்றது திடீரென்று எடுக்கப்பட்ட முடிவு. எனவே அது விவசாயிகளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. பிறகு எப்படி அவர்கள் பெருமளவில் கூடிநின்று, பிரதமரின் காரை வழிமறித்தனர்?*

*இந்த மில்லியன் டாலர் கேள்விக்கு இப்போது விடை கிடைத்துள்ளது. சம்யுக்த கிஸ்ஸான் மோர்ச்சா என்னும் விவசாயிகளின் கூட்டமைப்பு நேற்று சில காணொலிகளை வெளியிட்டுள்ளது. அவற்றில் அந்தக் கேள்விக்கான விடை இருக்கிறது.*

*பிரதமர் கார்கள் வரும் பாதையில் கூடியிருப்போரின் படத்தைப் பெரிது செய்து பார்த்தால் (Zoom), பறக்கும் கொடிகளெல்லாம் பாஜக கொடிகள் என்பது தெரிய வருகிறது!அவர்கள் கட்சிக்காரர்கள்தாம் பிரதமரை வரவேற்க அங்கு காத்திருந்திருக்கிறார்கள்! அவர்களிடமிருந்து தப்பி உயிர் பிழைத்து வந்தது பெரிய காரியம் என்றா நம் பிரதமர் சொல்கிறார்?*

*இல்லை, இன்னொரு உண்மையும் இப்போது வெளிவந்துள்ளது.*

*பிரதமர் கலந்துகொள்வதற்காக இருந்த பெரோஸ்பூர் கூட்டத்தில் 70000 நாற்காலிகள் போடப்பட்டுள்ளன. ஆனால் எவ்வளவு முயற்சித்தும் 300 நாற்காலிகள்தாம் நிரம்பியுள்ளன. அந்தக் கூட்டத்தில் எப்படி பிரதமர் கலந்துகொள்வது?*

*இந்த உண்மையைச் சொல்ல முடியாமல்தான், விவசாயிகள் பாதையை மறித்து விட்டனர் என்று புதுக்கதை சொல்லப்படுவதாக பஞ்சாப் அரசும், மக்களும் கூறுகின்றனர்! அதனால்தான், பிரதமரின் பஞ்சாப் பயணம் பஞ்சாய்ப் பறந்து தில்லிக்கே திரும்ப வந்து விட்டது!*

●



*இன்றைய தலைமுறை அறியாத ஒன்று - பெரியம்மையால் பாதிக்கப்பட்டு மறைந்த உயிர்களும், தழும்புகளோடு காலம் முழுவதும் வாழ்ந்த முகங்களும்!*

*சில ஆண்டுகளுக்கு முன் வரையில் அறியப்பட்ட ஒன்று - போலியோ எனப்படும் இளம்பிள்ளை வாத நோயினால் பாதிக்கப்பட்டுத் தத்தித் தவழ்ந்து நடந்த நம் உடன்பிறந்தவர்களின் வாழ்க்கை!*




*இன்று அந்த இரண்டு நோய்களும் உலகில் இல்லை. எப்படி? நவீன மருத்துவத்தின் சாதனை அது! தடுப்பு மருந்துகளால் அந்தத் துயரம் விரட்டியடிக்கப்பட்டது.*

*1876 ஆம் ஆண்டு எட்வர்ட் ஜென்னர் பெரியம்மைக்கு எதிரான ஒரு மருந்தைக் கண்டுபிடித்தார். தொடர் ஆய்வுகளுக்குப் பிறகு, 1958 தொடங்கி உலகம் முழுவதும் தடுப்பு முறைகள் பின்பற்றப்பட்டன. 1975 ஆம் ஆண்டின் இறுதியில், எத்தியோப்பியா, சோமாலியா போன்ற ஓரிரு நாடுகளில் மட்டுமே அந்த நோய் காணப்பட்டது. நவீன மருத்துவம் அங்கிருந்தும் அந்த நோயினை மறையச் செய்தது. 1979 டிசம்பர் 9 ஆம் நாள் உலகை விட்டே அந்தப் பெரியம்மை போய்விட்டதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது!*

*அதே போன்றுதான், தடுப்பு மருந்துகளால் போலியோ நோய் அகற்றப்பட்டது. 1988 இல் தொடங்கப்பட்ட முயற்சி, இப்போது முழுமையான வெற்றியை நெருங்கிக் கொண்டிருக்கிறது. 2012 இல் போலியோ மீதமிருக்கும் நாடுகளின் பெயர்கள், சுருக்கமாக, PAIN என்று ஆங்கிலத்தில் சொல்லப்பட்டது. அதாவது, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தியா, நைஜீரியா ஆகிய நான்கு நாடுகளில் மட்டுமே அந்நோய் அப்போது இருந்தது. இப்போது இந்தியா, நைஜீரியா ஆகிய நாடுகளும், போலியோவிலிருந்து விடுதலை பெற்று விட்டன. 2021 இல் நைஜீரியாவில் ஒருவருக்கும், ஆப்கானிஸ்தானில் நால்வருக்கும் மட்டும் அந்நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.*

*அனைத்தும் நவீன மருத்துவ வளர்ச்சியால் நிகழ்ந்த சாதனைகள். இந்நிலையில், இப்போது கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றன. அதனைப் பாசிசம் என்று சிலர் கூறத் தொடங்கியுள்ளனர். தடுப்பூசிகளைத் தடுப்பதற்காக நேற்று (07.01.2022) சிதம்பரத்தில் ஒரு கூட்டமே நடந்துள்ளது.*

*யார் அந்தக் கூட்டத்தை நடத்தியது? தமிழ்த் தேசியப் பேரியக்கம் என்று துண்டறிக்கை கூறுகின்றது. அவர்கள் யார்? தங்களைத் தமிழ் இந்துக்கள் என்று அறிவித்துக் கொண்டவர்கள். ஓ..சரி, அறிவியலுக்கும், மானுட முன்னேற்றத்திற்கும் மதவாதிகள் எப்போதும் எதிராகத்தானே இருப்பார்கள்!*

●

# கோவை 02-01-2022 அன்று
# பேரவையில் இணைந்த கைகள்!



தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## கனியிருக்கக் காய் வேண்டாம்

என்ன பேச வேண்டும், எப்படிப் பேச வேண்டும், அதுவும் எங்கே பேச வேண்டும் என்பதை உணர்ந்து பேசுவதுதான் ஓர் எதிர்க்கட்சித் தலைவருக்கு அழகு.

நடந்து முடிந்த சட்ட மன்றத்தில், ஆளுநர் உரையின் போது வெளிநடப்புச் செய்த எதிர்கட்சித் தலைவர் எடப்பாடியாருக்கு இவையெல்லாம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. காரணம், அவர் வளர்ந்த அரசியல் கூடாரம் அப்படிப்பட்டது.

வெளிநடப்பு செய்த எடப்பாடியார் செய்தியாளர்களிடம் பேசும் போது கண்ணை மூடிக் கொண்டு, அவரின் ஆட்சியின் போது தமிழ்நாட்டில் என்னவெல்லாம் நடந்ததோ அவையெல்லாம், இன்றைய தி.மு.கழக ஆட்சியில் நடப்பதாகச் சொல்லிக் கொண்டு இருந்தார்.

இந்த ஆட்சியில் போதைப்பொருள் சரளமாக இருப்பதாகக் கூறும் அவர், அவரின் அ.தி.முக ஆட்சியில் குட்கா விஜயபாஸ்கரை மறந்து விட்டார்.

மழை நீர் நிவாரண நிதி வழங்கவில்லையாம் இன்றைய அரசு.

கொரோனா கால நெருக்கடியில் மக்களுக்கு ரூபாய் 4000 கொடுத்தது கழக அரசு.

2021 செப்டம்பர் 15 இல் வீட்டில் இருந்து கொண்டு செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்து மக்களை நீரில் மிதக்க வைத்தது அ.தி.மு.க அரசு?

சொல்லி மாளாத அளவுக்கு மழை கொட்டி, வெள்ளம் பெருக்கெடுத்த போது, அந்த வெள்ளத்திலும் முதலமைச்சர் மக்களைத் தேடிச் சென்றுப் பார்த்து நிவாணம் வழங்கியது தி.மு.கழக அரசு.

அம்மா மினி கிளினிக்கை எடுத்து விட்டதாம் இன்றைய அரசு. அந்தக் கிளினிக்கை ஓராண்டு "அக்ரிமென்ட்" என்றுதானே எடப்பாடி அரசு திறந்தது. மறந்து விட்டாரா எடப்பாடியார் ?

காவல்துறை ஏவல் துறையாம். பாவம், இன்றும் அவரின் அ.தி.மு.க ஆட்சி நடப்பதாக நினைக்கிறார் போலும்.

உங்களைத்தான் மக்கள் விரட்டி விட்டார்களே. பிறகென்ன? " நாங்கள் ஆட்சிக்கு வந்திருந்தால்..." என்று தம்பட்டம், அதுவும் செய்தியாளர்களிடம்!

அ.தி.மு.க ஆட்சியின் அவலத்தையும், தி.மு.கழக ஆட்சியின் அருமையையும் மக்கள் அறிவர், ஊரறியும், உலகும் அறியும்.

எதிக்கட்சித் தலைவர் மக்களுக்காகப் பேச வேண்டும், உளறக்கூடாது.

"கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" பெரும் புலவர் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

## தை– தமிழ்ப் புத்தாண்டு

**இரா.விஜயலட்சுமி**



காலைக் கருக்கலில்
உழவரெலாம்
கலப்பை சுமந்து
காலில்
வேகம் கூட்டி
வயல் களத்தில்
சிந்திய வியர்நீரெல்லாம்
கதிராய்
கதிரின் மணியாய்
முளைத்தது பாரீர்
"பொங்கலோ பொங்கல் !"

முத்தான புத்தரிசி
புதுப்பானையிட்டு
பத்திரமாய் வைத்திருந்த
பாலொடு நெய்யும்
சத்தான பருப்பும்
சுவை கூட்ட வெல்லமிட்டு
தித்திக்கும் தை நாளில்
திசை நோக்கிப்
பொங்கலிட்டார்.

மானமும் அறிவும்
மனிதர்க்கு அழகென்று
மனங்களில் நல் விதை
முளைத்துச் செழித்தது!

தானமும், தகைமையும்
தரணியைக் காத்திட
தழைத்து வளர்கவே
தை – தமிழ்ப் புத்தாண்டே!

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# தமிழர் திருநாள் வாழ்த்துகள்

**ஜனனி**

“தரணியாண்ட தமிழருக்குத் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு” என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

‘முன் காலத்தில் வருடப்பிறப்பு சித்திரை முதல் நாளாக இருந்ததில்லை. தை முதல் நாளைத்தான் வருடப்பிறப்பாக பெரியோர்கள் கொண்டாடினார்கள்’ என்றார் அறிஞர் மு. வரதராசனார்.

‘கி.பி.78 ஆம் ஆண்டில் வடபுலத்து வேந்தன் சாலிவாகனன் என்பான் உருவாக்கியதுதான் 60 ஆண்டு காலண்டர்’ என்றும், ‘அந்த காலண்டரில் முதல் மாதம்தான் சித்திரை’ என்றும் பேராசிரியர் மு.பி. பாலசுப்பிரமணியன் விவரித்துக் கூறியிருக்கிறார். இந்த அறுபதாண்டு காலண்டரில் வரும் ஆண்டுகளின் பெயர்கள் பிறந்தக் கதையைக் கேட்டால் அறிஞர் உலகம் சிரிக்கும்.

“பிரபவ, விபவ எனும் பெயர்களில் ஒன்றேனும்/

அருந்தமிழ்ப் பெயரிலுண்டா? அறுபதெனும் ஆண்டுச்/

சிறப்பின் சரித்திரமோ பேசினால் பெரு விரசம்!/

கோபியரின் வீடெல்லாம் குழல் கண்ணன் போய்நுழைந்துத்/

தாபமெல்லாம் தணிப்பதனைத் தான்கண்ட நாரதனும் /

ஆரணங்கின் வடிவெடுத்தே அக்கண்ணன் தனைக்கூடிப்/

பெற்றெடுத்த பிள்ளைகளின் பேர் இவையாம்; பெரும் வெட்கம்!”

-இவ்வாறு பாடியிருக்கிறார் கவிஞர் கா.வேழவேந்தன்

தமிழ் ஆண்டுகள் என்று கூறப்படும் 60 ஆண்டுகள் என்பன இடையில் ஆரியர்களின் புராணச் செருகல் ஆகும். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் மிக அழகாக ஓவியம் தீட்டினார்.

“பத்தன்று; நூறன்று; பன்னூறன்று; பல்லாயிரத்தாண்டாய்த் தமிழர் வாழ்வில் புத்தாண்டு தை முதல் நாள் பொங்கல் நன்னாள்” என்றார் அவர்.

‘தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு- தமிழர் திருவிழா’ என்று சொன்னால், தங்களைத் தமிழர்கள் என்று எண்ணுவார்களேயானால், அதனை எதிர்ப்பார்களா? ஆரியர்-திராவிடர் போராட்டம் இன்னும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது.

இதனை அறிஞர் அண்ணா அவர்கள் மிக அழகாகப் படம் பிடித்துத் தந்துள்ளார்.

“தமிழ்நாட்டில் பிறந்தும், தமிழ் மொழி பயின்றும் தமிழர் என சொல்லிக் கொண்ட போதிலும் தமிழ் மொழி மூலம் பிழைத்து வந்தாலும், தமிழிலே பண்டிதர் என்ற பட்டம் பெற்றாலும் சங்கநூல் கற்றாலும், பார்ப்பனர்கள் தமிழிடத்திலே அன்புக் கொள்வதில்லை. அதனைத் தம் தாய்மொழியெனக் கருதுவதில்லை.அவர்களின் எண்ணமெல்லாம் வடமொழியாகிய சமஸ்கிருதத்தின் மீதுதான்.” (திராவிடநாடு, 2.11 1947, பக்கம் 18)

தமிழர் திருநாளில் இந்தச் சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டு புத்தாண்டை வரவேற்போம். பொங்கட்டும் உரத்த சிந்தனை! அனைவருக்கும் அன்பான தமிழ்ப் புத்தாண்டுப் பொங்கல் வாழ்த்துகள்! ●

# நீட் சட்ட முன்வடிவு ஆளுநரும் அமித்ஷாவும்

**சாரதாதேவி**

கடந்த 05.01.2021 அன்று புது தில்லியில் தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி விலக வேண்டும் என மாநிலங்களவை உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்கள் கேட்டுக் கொண்டார். ஒன்றிய உள்துறை அமைச்சரின் அலுவலகத்திலிருந்து வெளியே வந்த பின் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் கோபமாக உதிர்த்த வார்த்தைகள் அவை. என்ன செய்தார்கள் ஆளுநரும் அமித்ஷாவும்?

பதவியேற்ற ஒரு மாதத்திலேயே நீட் தேர்வின் பாதிப்புகளை ஆராய ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே. ராஜன் தலைமையிலான குழுவின் அறிக்கையின் மூலம், நீட் தேர்வின் பாதகங்கள் நம் மாநிலத்தின் மருத்துவக் கட்டமைப்பைச் சீர்குலைக்கப் போவதைக் கேட்டு அறிந்து கொண்டார் முதலமைச்சர். தமிழ்நாட்டு மாணவர்களை வஞ்சித்து மருத்துவத் துறையிலிருந்து விலக்கப் போகும் நீட் தேர்விலிருந்து விலக்குக் கோரும் சட்ட முன்வடிவை சட்டப் பேரவையில் 19.9.2021 அன்றே தாக்கல் செய்துவிட்டார். அந்த சட்டமுன்வடிவிற்கு வலு சேர்க்கும் விதமாக ஏ.கே.ராஜன் குழு அறிக்கையும் 21.9.2021இல் வெளிவந்தது. சட்டமுன்வடிவு ஒருமனதாக சட்டப்பேரவையில் நிறைவேறிய பின்னர் ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக முறையாக ஆளுநரிடம் அனுப்பி வைக்கப்பட்டது.



ஜனாதிபதியின் ஒப்புதல் கோரி அனுப்பப்படும் சட்ட முன்வடிவுகள் அந்தந்த மாநில ஆளுநர்கள் வழியாகவே ஜனாதிபதி அலுவலகத்துக்கு அனுப்பப்படும். அது ஒரு மரபு மட்டுமே. ஆளுநர் தன் பரிந்துரையை அல்லது வெறுமனே மேலனுப்புதல் மட்டுமே செய்ய வேண்டும். அதுவும் 3 மாதங்களுக்குள். ஆனால் நம் ஆளுநர் அதை அப்படியே வைத்து அடைகாத்துக் கொண்டிருந்தார். இரண்டு மாதங்கள் கழித்து முதலமைச்சர் 27.11.2021 அன்று ஆளுநரைச் சந்தித்து மீண்டும் ‘நீட்’ சட்ட முன்வடிவு குறித்து நினைவூட்டித் திரும்பினார். எந்தப் பயனுமில்லை. அதன் பின்னரே திரு.டி.ஆர்.பாலு தலைமையில் தமிழகத்தின் மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி அலுவலகத்தில் நடந்தவற்றை விளக்கி, நீட் விலக்குக் குறித்து ஜனாதிபதிக்கு ஒரு கடிதத்தை அளித்தார்கள்.

அந்தக் கடிதம் உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக ஜனாதிபதி அலுவலகம் பதில் அளித்தது. அதைத் தொடர்ந்து உள்துறை அமைச்சகத்துக்குப் படையெடுத்தார் டி.ஆர்.பாலு தன் குழுவோடு! ஆனால் அங்கிருந்து அவர்களைச் சந்திக்க மறுப்பும் கள்ள மவுனமுமே பதிலாக வந்தது. இறுதியாக, தங்கள் தரப்பில் ஒரு கடிதத்தை அமித்ஷாவின் அலுவலத்தில் கொடுத்துவிட்டு, செய்தியாளர் சந்திப்பில் தங்கள் கண்டனத்தை வெளிப்படுத்தியே திரு.டி.ஆர்.பாலு அவர்கள் ஆளுநரின் ராஜினாமாவைக் கோரினார். அதே நாளில் 110 சிறப்பு விதியின் கீழ் 8 ஆம் தேதி அடுத்த கட்ட நடவடிக்கைக்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தார் முதலமைச்சர். விடுதலைச் சிறுத்தைக் கட்சி உறுப்பினர்கள் ஆளுநர் உரையைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்தார்கள்.

ஆளுநர் மேலனுப்பியிருந்தால், ஜனாதிபதி ஒப்புதல் அளித்திருக்க வேண்டும். இந்நேரம் நம் மாணவர்கள் தலை மீது தொங்கும் கத்திகளும் கயிறுகளும் அப்புறப் படுத்தப்பட்டு இருக்கும். இது எதுவுமே நடக்காமல் செய்யும் ஆளுநரும் அமித்ஷாவும் பதவியில் இருந்தால் என்ன? இல்லாமல் போனால்தான் என்ன? ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian